Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 21/2023**

**Deposition of PW. 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜபாண்டி | ஜாதி | : | |
| த/பெ | : | தவசித்தேவர் | தொழில் | : | விதை ஆய்வாளர், மதுரை விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகம் |
| கிராமம் | : | கருமாத்தூர் | சமயம் | : | |
| தாலுகா | : | உசிலம்பட்டி, மதுரை | வயது | : | 55/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.10.2024.

(Accused A3, A4 present A1, A2, A5 absent U/s. 317 CrPC petition filed and allowed)

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது மதுரை விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகத்தில் விதை ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திண்டுக்கல் விதை பரிசோதனை மையத்தில் வேளாண் அலுவலராக பணியில் இருந்த போது கடந்த 03.09.2019 அன்று வத்தலகுண்டு விதை ஆய்வாளரிடமிருந்து 273/88/1920 என்ற விதை ஆய்வாளரர் குறியீட்டு எண்ணுடன் விதை பரிசோதனைக்காக எங்களது அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்றது. மேற்கண்ட விதையை 12.09.2019 அன்று எங்களது அலுவலகத்தில் வைத்து பரிசோதனைக்கு உட்படுத்தினோம். பின்பு 18.09.2019 அன்று மேறகண்ட விதையின் முளைக்கும் திறனை ஆய்வுக்கு உட்படுத்தினோம். அந்த விதைகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதில் 67 % மட்டுமே முளைத்திருந்தது. அதனால் அன்றைய தினமே அதனை மறு பரிசோதனைக்கு உட்படுத்தி மீண்டும் 20.09.2019 அன்று அதன் முளைக்கும் திறனை ஆய்வுக்கு உட்படுத்தினோம். அப்போது 70% முளைத்திருந்தது. அந்த அறிக்கையை வத்தலகுண்டு விதை ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். மேற்கண்ட அறிக்கை ஏற்கனவே அ.சா.ஆ 9 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட விதையின் தன்மை குறைந்தபட்சம் 90 % இல்லாததால் தேர்ச்சி பெறவில்லை என கருத்துரை வழங்கினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விதை மாதிரிகளை விதை ஆய்வாளரே நேராக வந்து எங்களது அலுவலத்திற்கு வந்து கொடுத்தார். 03.09.2019 அன்று கொண்டு வந்து கொடுத்தார். நேரம் ஞாபகமில்லை. மேற்கண்ட விதைகளை மாதிரிக்கு எடுத்தது 29.08.2019 என்று எங்களுக்கு அனுப்பிய வேண்டுகோள் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். விதையை மாதிரி எடுத்த பின்பு 5, 6 நாட்கள் கழித்து தான் எங்களிடம் சோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். பொதுவாக விதையை

மாதிரிக்கு எடுத்தால் எவ்வளவு நாட்களுக்குள் சோதனைக்கு அனுப்ப வேண்டும் என்று விதை ஆய்வாளருக்கு தான் தெரியும். விதை மாதிரிக்கு எடுத்தால் 3 நாட்களுக்குள் சோதனைக்கு அனுப்பி விட வேண்டும். 6 நாட்கள் மாதிரிக்கு எடுத்த விதையை விதை ஆய்வாளர் தன்னுடைய இருப்பில் வைத்திருந்ததற்கு தனிப்பட்ட முறையில் விளக்கம் எதுவும் கொடுத்தாரா என்றால் இல்லை. மேற்கண்ட 6 நாட்களில் விதை ஆய்வாளரர் பாதுகாப்பற்ற முறையில் வைத்திருந்தால் அதன் முளைப்பு திறன் குறைவதற்கு வாய்ப்பு உள்ளதா என்றால் சரிதான். விதை பாதுகாப்பான முறையில் வைக்கப்பட வேண்டும் என்றால் அந்த அறையில் 15 முதல் 25 செல்சியஸ் வெப்பநிலை இருக்க வேண்டும். இந்த விதையை ஆகஸ்ட் மாதம் ஆய்விற்கு எடுத்துள்ளார்கள். அப்போது திண்டுக்கல் மாவட்டத்தில் 30 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை இருந்திருக்கும் என்றால் சரிதான். பொதுவாக விதை ஆய்வாளர்களுக்கு என்று குளிரூட்டப்பட்ட அறை எதுவும் ஒதுக்கப்படுவதில்லை. அவ்வாறு குளிரூட்டப்பட்ட அறை ஒதுக்கப்படவில்லை என்றால் அந்த அறையில் குறைந்தபட்சம் 30 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை இருந்திருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு 30 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் விதைகள் இருந்தால் அதன் முளைக்கும் திறக் பாதிக்கப்படும் என்றால் சரிதான். விதையின் முளைப்பு திறன் சோதனைக்கு முன்பு அது எவ்வாறு சோதனைக்கு உட்படுத்துவோம் என்றால் எங்களிடம் 1 கிலோ மாதிரி விதையை கொடுப்பார்கள் அதில் 900 கிராமை சோதனைக்கு உட்படுத்துவோம். அதை 50, 50 விதைகளாக 8 மடங்காக முளைக்க விடுவோம் அதை கவுண்ட் முறையில் நாட்களை வைத்து முளைக்கும் திறனை சோதனை செய்வோம். சோதனை அறையின் Infrastructure எவ்வாறு இருக்கும் என்றால் 750 லிருந்து 1250 லக்ஸ் அளவிலான வெளிச்சத்தை பராமரிப்போம். ஈரப்பதம் 90 % லிருந்து 5% கூடுதலாகவோ, குறைவாகவோ இருக்கும். விதைகளை சோதனைக்கு எடுக்கும் முன்பு ஜெர்மினேசன் பேப்பரில் மட்டும் தான் முளைப்பு சோதனை செய்வோம். மேற்கண்ட ஜெர்மினேசன் பேப்பரில் முளைப்பு திறன் குறைவாக இருககும் என்றால் சரியல்ல. நல்ல நிலையிலேயே முளைக்கும். விதையை சோதனை செய்வதற்கு முன்பு எந்த ட்ரீட்மெண்ட்டும பன்ன மாட்டோம். விதையை ஊற வைத்து அதன் பிறகு தான் சோதனை செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. இன்பரசன் கருவி மூலம் அழுத்தி 50 குழிகளை உருவாக்கி அதில் விதைகளை வைத்து முளைப்பு திறனை சோதனை செய்வோம். ஜெர்மினேசன் பேப்பரில் ஆய்வு செய்த அறிக்கையை விதை ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மண்ணில் பரிசசோதனை செய்த அறிக்கையை தான் அ.சா.ஆ 9 ஆவணமாக கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட அறிக்கையில் மண்ணில் சோதனை செய்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 24.09.2019 அன்று மேற்கண்ட அறிக்கையை தபாலில் அனுப்பி வைத்தேன். ஆய்வறிக்கையை அலுவலருக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றால் பதிவு தபாலில் தான் அனுப்பிவைக்க வேண்டும் என்றால் எங்களுக்கு அவ்வாறு அறிவுறுத்தல் எதுவும் இல்லை. அவ்வாறு தான் அனுப்பி வைக்க வேண்டும் விதை ஆய்வாளர் என் சக அலுவலர் என்றால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட அறிிகையை அனுப்பிய விவரத்தை எங்களது அலுவலக பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். அதனை சான்றாவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அதற்காக தேவை இல்லை. வழக்கினுடைய விதை குவியல் எண் 14903074 என்பதும் என்னிடம் காட்டப்படும் விதை பகுப்பாய்வு அறிக்கையான எ.சா.ஆ 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதை குவியல் எண்ணும் ஒன்றுதான். நான் சமர்பித்த அறிக்கையில் மேற்கண்ட குவியில் எண் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். எண்ணிடம் காட்டப்படும் 19.08.2019 தேதியிட்ட மேற்கண்ட அறிக்கையிலும் எ.சா.ஆ 4 ஆன 09.10.2019 தேதியிட்ட அறிக்கையிலும் 91 % முளைப்பு திறன்

இருக்கிறது என்று குறிப்பிடபட்டிருக்கிறது என்றால் சரிதான்.மேற்கண்ட அதே குவியல் எண்ணில் எனக்கு முன்னால் எடுக்கப்பட்ட மாதிரியின் அறிக்கையும் எனக்கு பின்னால் எடுக்கப்பட்ட மாதிரி அறிக்கையும் 91 % முளைப்பு திறன் உள்ளதாக குறிப்பிடபட்டுள்ளது என்றும் நான் வழக்கிற்காக தவறான அறிக்கையை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. திண்டுக்கல் மாவட்ட விதை சோதனை அலுவலத்தில் வருடத்திற்கு சுமார் 3000 லிருந்து 4000 சோதனைகளை பரிசோதனை செய்வோம். விதை ஆய்வாளர் அன்றைய தினம் இந்த வழக்கின் விதை மட்டும அல்லாமல் மொத்தம் 11 விதை மாதிரிகளை கொடுத்தார். அந்த அனைத்து மாதிரிகளையும் நாங்கள் பரிசோதனை செய்தோம். அந்த அறிக்கையை விதை ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தோம். அதை எந்த தேதியில் அனுப்பிவைத்தோம் என்று ஞாபகமில்லை. இந்த வழக்கில் நான் கொடுத்த ஆய்வறிக்கை விதை ஆய்வாளர் எனது சக ஊழியர் என்பதால் அவருக்கு சாதகமாக கொடுத்துவிட்டு அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**Sd/.P.Jaisankar**
District Munsif Cum Judicial Magistrate,
Athoor.